Name of the Newspaper: Dinathanthi Date: 27/7/12

### அண்ணாசாலை சுரங்கப்பாதையில்

# இறுதிக்கட்டத்தில் மெட்ரோ ரெயில் நிலைய பணிகள்

## அதிகாரிகள் தகவல்

சென்னை, ஜூலை.27–

சென்னை அண்ணா சாலை சுரங்கப்பாதையில் உள்ள 4 ரெயில் நிலைய பணிகளும் இறுதிக்கட்டத்தில் உள்ளன என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

### சுரங்கப்பாதையில் ஆய்வு

சென்னை அண்ணாசாலையின் ஒரு பகுதியில் சின்னமலை–தேனாம்பேட்டையில் உள்ள ஏஜி–டி.எம்.எஸ். வரை உள்ள 4 கிலோ மீட்டர் மெட்ரோ ரெயில் சுரங்கப்பாதை பணிகள் நிறைவடைந்தது. இந்த பணிகளை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது இந்த சுரங்கப்பாதையில் டீசல் ரெயில் என்ஜினை இயக்கி தண்டவாளத்தின் உறுதித்தன்மை மற்றும் சிக்னல்கள் உள்ளிட்ட பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. தொடர்ந்து சின்னமலை–தேனாம்பேட்டை இடையே டீசல் ரெயில் என்ஜின் மூலம் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

### இறுதிக்கட்டம்

இந்தப்பாதையில் மெட்ரோ ரெயிலை இயக்கி பார்க்க அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர். இப்பாதையில் உள்ள சைதாப்பேட்டை, நந்தனம், தேனாம்பேட்டை, ஏஜி–டி.எம்.எஸ். ஆகிய 4 ரெயில் நிலையங்களின் கட்டுமானப்பணிகள் முடிவடைந்து உள்ளன. அழகுபடுத்தும் பணிகள் தற்போது நடந்து வருகிறது.

பாதுகாப்பு ஆணையர் சோதனை நடத்திய பின்னர் இந்தப்பாதையில் பயணிகள் ரெயில் இயக்க அனுமதி கிடைக்கும். அதற்கு முன்பாக ரெயில் நிலைய பணிகளை நிறைவு செய்ய அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். அதன்படி தற்போது 4 ரெயில் நிலையங்களிலும் டிக்கெட் கவுண்டர்கள், லிப்ட், நகரும் படிக்கட்டுகள் உள்ளிட்டவை அமைக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டி உள்ளன.

### அடுத்த ஆண்டு இயக்கப்படும்

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

ஒவ்வொரு சுரங்க ரெயில் நிலையங்களிலும் பயணிகள் நிற்கும் பகுதிக்கு காற்று செல்லும் பாதை உள்ளிட்ட பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது சைதாப்பேட்டை, நந்தனம், தேனாம்பேட்டை, ஏஜி–டி.எம்.எஸ். ஆகிய ரெயில் நிலையங்களில் நடைமேடையையும், தண்டவாளம் இருக்கும் பகுதியையும் மறைக்கும் கதவுகள் பொருத்தும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. பாதுகாப்பு ஆணையர் ஆய்வு செய்ய வருவதற்கு முன்பாக ரெயில் நிலையத்தில் அனைத்துவித பணிகளும் நிறைவடைந்து விடும்.

சுரங்கத்துக்கு உள்ளே பயணிகளின் செல்போன்களுக்கு சிக்னல் கிடைக்கும் வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது. சைதாப்பேட்டை– மேதின பூங்கா இடையே உள்ள 7.3 கிலோ மீட்டர் பாதையையும் விரைந்து முடித்து அடுத்த ஆண்டு ரெயிலை இயக்க திட்டமிட்டு உள்ளோம்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.